பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 138 நாள்: 08.09.2018

**சென்னை மாவட்டத்தை உள்ளடக்கிய 16 சட்ட மன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சவாடி மையங்களில் 09.09.2018 அன்று நடைபெறும் சிறப்பு முகாம்களில் பொதுமக்கள் வாக்காளர் பெயர் சேர்த்தல் / நீக்கல் மற்றும் திருத்தங்கள் செய்து கொள்ளலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

= = = = = =

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி சென்னை மாவட்டத்தில் உள்ளடக்கிய 16 சட்ட மன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள் 01.01.2019ஆம் தேதியினை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு 2019ஆம் ஆண்டின் சிறப்பு சுருக்க முறை திருத்தம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சுருக்க முறை திருத்தம் தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல்கள் கடந்த 01.09.2018 அன்று வெளியிடப்பட்டு பொது மக்கள் தங்களது யெர்கள் மற்றும் குடும்பத்தார்களது பெயர்கள் குறித்த விபரங்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனவா ? என்பது குறித்து சரிபார்த்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்காமல் உள்ளவர்கள் மற்றும் 01.01.2019 அன்று 18 வயது நிறைவு அடைகின்றவர்கள் (01.01.2001 ஆம் தேதிக்கு முன்பிறந்தவர்கள்) படிவம் 6–னை பூர்த்தி செய்தும், பெயர்கள் நீக்கம் தொடர்பாக படிவம் 7–னை பூர்த்தி செய்தும், பட்டியலில் திருத்தம் தொடர்பாக படிவம் 8–னை பூர்த்தி செய்தும், சட்டமன்ற தொகுதிக்குள்ளேயே ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிபெயர்ந்து புதிய வசிப்பிடத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 8–A யினை பூர்த்தி செய்தும் அதற்கான ஆவண ஆதார நகலினை இணைத்தும் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலரின் அலுவலகத்தில் 31.10.2018 காலத்திற்குள் விண்ணப்பிக்கலாம்.

மேலும், வரும் 09.09.2018 (ஞாயிற்று கிழமை) அன்று அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது. அம்மையத்தில் பொது மக்கள் உரிய படிவங்களை பெறவும். பூர்த்தி செய்த படிவங்களையும் சிறப்பு முகாம் நடைபெறம் இடங்களில் சேர்ப்க்கவும் செய்யலாம். மேலும் www.elections.tn.gov.in மற்றும் nvsp.in இணையதளம் மூலமாகவும் பெயர்கள் சேர்தல் நீக்கம் மற்றம் திருத்தங்கள் தொடர்பாகவும் விண்ணப்பிக்காலம்.

ஜனநாயகத்தினை வலுப்படுத்த, தகுதியுள்ள அனைத்து பொது மக்களும் வாக்காளர் பட்டியலில் இடம் பெற ஏதுவாக, வரைவு வாக்காளர் பட்டியலினை பார்வையிட்டும் 09.09.2018 அன்று காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை நடைபெறும் சிறப்பு முகாம்களில் பங்கேற்று புதிய வாக்காளர்களின் பெயர்களை சேர்த்து வாக்காளர் பட்டியலை சரிசெய்ய ஏதுவாக இச்சிறப்பு சுருக்க திருத்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறும் மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**